மாதத்திற்குள் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்ற நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நன்கொடையாளர்கள், உபயதாரர்கள் அதிகளவில் திருக்கோயில் திருப்பணி செய்ய வருகை தருகிறார்கள். இதுவரையில், இந்த ஆட்சி ஏற்பட்ட 28 மாதங்களில், 600 கோடி ரூபாய்க்கு மேலாக திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள உபயதாரர்கள் வருகிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) உபயதாரர்கள் தருகின்ற நிதி முறையாக திருக்கோயிலுக்குச் செலவிடப்படுகிறது என்ற நம்பிக்கையால்தான் இவ்வளவு பெரிய தொகை உபயதாரர்களிடமிருந்து நிதியாகப் பெறப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்கள் புனரமைக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய 3 திருக்கோயில்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

உள்ளூர் மக்களுக்கு அனுமதி

***53137—முனைவர் இசக்கி சுப்பையா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, பாபநாசத்தில் உள்ள அருள்மிகு சொரிமுத்து அய்யனார் திருக்கோயிலுக்கு உள்ளூர் மக்கள் சென்றுவர கட்டணமில்லா அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 அக்டோபர் 10]

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 220, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 13-7-2004-ன்படி, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனக் கோட்டம், பாபநாசம் சரகத்தில் உள்ள அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களிடம் கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.*

முற்பகல் 10-55

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தருகின்ற உயரத்தை கவனத்தோடும், மனிதர்கள் தருகின்ற மகுடத்தை நிதானத்தோடும் ஏற்று, ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்களுக்காக மக்களின் பிரச்சினைக்காகக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் புரட்சித் தமிழர் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசாணை எண் 220, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, வனம் (5), இயற்றப்பட்டு, இறைவனை வழிபட கட்டணம் ஏதுமின்றி அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு எங்களது அம்மா அவர்களுக்கு பக்தர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதை இன்றும் நடைமுறைப்படுத்தும் தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், G.O. (Ms.) No.11, dated *8-2-2018-ல் மாண்புமிகு புரட்சித் தமிழர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் வாகனங்கள், பார்வையாளர்களுக்கு மட்டும் கட்டணம் வசூலிப்பதை வரன்முறைப்படுத்தி, அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் 1-4-2022 அன்று எழுத்துப்பூர்வமாக உள்ளூர்வாசிகள் என்பவர்கள் பார்வையாளர்கள் இல்லை, அதனால், அவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் செல்வதற்கு அனுமதி வழங்குமாறு நான் கேட்டுக்கொண்டதற்கு, அவருடைய கடித*

நாள் 11-4-2022-ல் நுழைவுக் கட்டணம் செலுத்தாமல், உள்ளூர் மற்றும் தொகுதி மக்கள் அவர்களின் ஆதார், அடையாள அட்டைகளை மட்டும் காண்பித்துச் செல்ல அரசாணை ஏதும் இல்லை. மேற்படி அனுமதி தொடர்பாக, வனப் பகுதியில் உள்ள அகஸ்தியர் அருவிக்கு நுழைவுக் கட்டணம் செலுத்தாமல் செல்ல மாநில அரசு ஆணை பிறப்பித்தால், அதனடிப்படையில் அனுமதி வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். ஆனால், அதேநேரத்தில், அதே சம்பந்தப்பட்ட அதிகாரி, அவருடைய மற்றொரு கடிதத்தில், அகஸ்தியர் அருவியில் குளிக்க கட்டணம் வசூல் செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளார். இந்த இரண்டு கடிதங்களில், தற்போது எது நடைமுறையில் உள்ளது என அறிய விரும்புவதோடு, அரசாணை மிகத் தெளிவாக உள்ளது. வாகனங்களுக்கும், பார்வையாளர்களுக்கும் மட்டும்தான் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்று உள்ளதால், உள்ளூர்வாசிகள் கண்டிப்பாகப் பார்வையாளர்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியும், பதிலும் ஒரே அதிகாரியிடம் வாங்கி நீங்களே வைத்துள்ளீர்கள். (சிரிப்பு)

முனைவர் இசக்கி சுப்பையா: நான் உங்களுக்கும் சேர்த்துதான் பேசிக்கொண்டிருக்கின்றேன். இதேபோல், IT Expressway Limited-ல் நுழைவுக் கட்டண விலக்கு அளித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். பிறகு உங்களுக்கு இன்னொரு துணைக் கேள்வி இருக்கிறது.

முனைவர் இசக்கி சுப்பையா: இது, அதோடு சேர்ந்த கேள்விதான். அதாவது, IT Expressway Limited-ல் நுழைவுக் கட்டணம் விலக்கு அளித்துள்ளார்கள். அதாவது local residents of IT corridor-Information to residents for exemption of toll for auto-rickshaw / car belonging to bonafide local residents living along Rajiv Gandhi Salai. இதுபோல், தாங்களும் உள்ளூர்வாசிகளுக்கு கட்டணமின்றி அகஸ்தியர் அருவியில் குளித்துவிட்டு, அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோயிலுக்கு எவ்வித பிரச்சினையுமின்றி செல்வதற்கு, ஆட்டோ மற்றும் கார்களுக்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது என்கிற கோரிக்கையையும் தங்கள் மூலமாக வைத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 10]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சோதனைச் சாவடிகளில், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் அறக்கட்டளை சார்பாக நுழைவுக் கட்டணமாக ரூபாய் 30 வசூலிக்கப்படுகிறது. குறிப்பாக, அகஸ்தியர் நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் மக்களிடமிருந்து மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சொரிமுத்து அய்யனார் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களிடமிருந்து எந்தத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் பகுதியில் மட்டும் அகஸ்தியர் நீர்வீழ்ச்சி, மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி, தலையணை நீர்வீழ்ச்சி என்று 3 நீர்வீழ்ச்சிகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், 3 சோதனைச் சாவடிகள் உள்ளன. பாபநாசம், மணிமுத்தாறு தலையணை உள்ளிட்ட இடங்களில் 3 சோதனைச் சாவடிகளும் உள்ளன. இந்தச் சோதனைச் சாவடிகள் தமிழகம் முழுவதும் உள்ள சரணாலயங்கள் மற்றும் காப்பகங்களில் உள்ளன. புலிகள் காப்பகத்தின் அறக்கட்டளை சார்பாக சோதனைச் சாவடிகள்மூலம் ரூ.30 வசூலிக்கப்படுகிறது. மிக முக்கியமாக, புலிகளைப் பாதுகாப்பதற்காகவும், புலிகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவதற்காகவும் அந்த நிதி உபயோகப்படுத்தப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், உள்ளூர்வாசிகளைப் பொறுத்தவரையில், விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள உள்ளூர்வாசிகள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை வரையறைப்படுத்துவது மிகவும் கடினமான சூழ்நிலையாக இருக்கிறது. ஓர் இடத்தில் நாம் விலக்களித்தால், அனைத்து இடங்களிலும் விலக்களிக்க வேண்டிய சூழ்நிலை வரும். வேறொரு மாவட்ட மக்கள் அல்லது வேறொரு ஒன்றிய மக்கள் எல்லோரும் கேட்கக்கூடிய சூழ்நிலை வரும். அதனால், உள்ளூர்வாசிகள் யார், சுற்றுலாப் பயணிகள் யார் என்பதைக் கண்டறிவது கடினமான சூழ்நிலையாக இருப்பதால் அந்தக் கட்டணம் கண்டிப்பாக வசூலிக்கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.

[2023 அக்டோபர் 10

முனைவர் இசக்கி சுப்பையா: அதாவது, விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள உள்ளூர்வாசிகள் ஆதார் அட்டை காண்பித்தாலே அவர்கள் உள்ளூர்வாசிகள் என்பது கண்டிப்பாகத் தெரிந்துவிடும். அதுவே போதுமானது. அடுத்து, புலிகள் காப்பகத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிதி என்று சொல்கிறீர்கள். உள்ளூர்வாசிகள் குறைந்தது ஒரு நாளைக்கு 100 பேர்தான் போவார்கள். 100X30 என்றாலுமே ரூ.3,000 தான் வரும். ஆகவே, தயவுகூர்ந்து அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதுமாதிரி ஒவ்வொரு நீர்வீழ்ச்சிக்கும் நாம் விதிவிலக்கு அளிக்கவேண்டிய சூழ்நிலை வரும். அதனால்தான் நாம் இப்போது கோயிலுக்குச் செல்வதற்கு எந்த வசூலும் செய்வதில்லை. நீர்வீழ்ச்சிக்கு விதிவிலக்கு அளிக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

219—

தார்ச்சாலை அமைத்தல்

***11922—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, வேப்படி பாலக்காடு கிராமத்திற்குத் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,